[5th August 1966

கூட்டுறவு நாணயச் சங்கங்களில் கையாடல்

*133 கேள்வி.—திரு. பி. முருகையன் . கனம் கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

நமது மாநிலத்தில் 1963 ஜனவரி முதல் 1965 டிசம்பர் முடிய எத்தனை கூட்டுறவு நாணயச் சங்கங்களில் கையாடல் சம்பந்தமான விசாரணைகள் நடத்தப்பட்டன—மாவட்டவாரியாக ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : District-wise particulars of the co-operative credit societies in which enquiries connected with misappropriation of funds were conducted during January 1963 to December 1965 are as follows :—

Name of the district.	*Number of societies.*
1. Madras	5
2. Chingleput	17
3. North Arcot	21
4. South Arcot	14
5. Thanjavur	30
6. Tiruchirappalli	22
7. Salem	14
8. Dharmapuri	2
9. Coimbatore	14
10. Madurai	6
11. Ramanathapuram	23
12. Tirunelveli	11
13. Kanyakumari	8
14. Nilgiris	4
Total ...	191

Pay and allowances of amins

*134 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether the Government have proposed to increase the pay scale, dearness and travelling alowances of Court amins to be on a par with those of readers?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : No.

திரு. வை. சங்கரன் : இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அமீனுக்களிடமிருந்து ஏதாவது முறையீடு வந்திருக்கிறதா ?

கனம் சபாநாயகர் : அது தான் இல்லையென்று சொல்லுகிறார் களே, அதற்குப் பின்னால் என்ன கேள்வி போடுகிறீர்கள் ?

மீன் படகுகள்

*135 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள கட்டுமரங்கள், வள்ளங்கள் எவ்வளவு ?

5th August 1966]

(இ) கட்டுமரம் கட்டுவதற்கு என்னென்ன மரங்கள் உபயோகிக்கப்படுகின்றன?

(உ) கட்டுமரத்திற்குத் தேவையான அலிபீஸ்யா மரம் வேண்டிய அளவு கிடைப்பதில்லை என்ற தகவல் சர்க்காருக்குக் கிடைத்திருக்கிறதா ?

(எ) தேவையான அளவு அலிபீஸ்யா மரம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இம் மாநிலத்தில் ஏறக்குறைய 28,000 கட்டு மரங்களும், 5,000 வள்ளங்களும் உள்ளன.

(இ) இம் மாநிலத்தில் உள்ள மீனவர்கள், கட்டுமரங்களைக் கட்ட மலைவேம்பு, வாகை போன்ற மரங்களின் கட்டைகளைப் பயன் படுத்துகின்றனர்.

(உ) இல்லை; சேலம், கோவை மாவட்டங்களிலுள்ள காடுகளிலும், கேரளத்திலுள்ள காடுகளிலும் வாகை மரம் கிடைக்கின்றது. இவற்றை மீனவர்கள் இவ்விடங்களிலிருந்து சாதாரணமாக வாணிக முறையில் பெறுகின்றனர்.

(எ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், கட்டுமரங்கள் கட்டுவதற்கான தேவைப்படுகிற மரங்கள் இலங்கையிலிருந்து வந்து கொண்டு இருந்தன. இப்போது அதற்குத் தடை இருப்பதாகத் தெரிகிறது. இதைப் பற்றியுள்ள விவரங்களை அரசாங்கம் பரிசிலனை செய்துள்ளதா ?

கனம் திரு. கோ. பூவராகன் : உண்மையில் முன்னால் இலங்கையிலிருந்து மரங்கள் வந்து கொண்டிருந்தன. இப்போது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், கட்டுமரங்கள் கட்டுவதற்கான மரங்களைப் பெறுவதில் சங்கடம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

* 136 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் 1965-66-ல் எத்தனை இயந்திரப் படகுகள் தயாரிக்கப்பட்டுள்ளன ?

(இ) 1966-67-ல் எத்தனை தயாரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) 1965-66-ல் 30 அடி நீளமுள்ள 108 படகுகளும், 32 அடி நீளமுள்ள 35 படகுகளும் கட்டப்பட்டன.

(இ) 1966-67-ல் 30 அடி நீளமுள்ள 100 படகுகளும், 32 அடி நீளமுள்ள 40 படகுகளும், 36 அடி நீளமுள்ள 10 படகுகளும் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : கட்டப்பட்ட படகுகள் முழுமையும் விநியோகிக்கப்பட்டு விட்டதா? பாக்கி ஏதேனும் இருக்கிறது என்றால் இதுவரை விநியோகிக்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் ?